மலர் 1 இதழ் 4 ஏப்ரல், 2017 ISSN : 2454-3993

# புறநானூற்றில் பெருங்காஞ்சித் துறை

முனைவர் கதி.முருகேசன் (கதிர்முரு)
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
கணேசர் கலை அறிவியல் கல்லூரி,
மேலைச்சிவபுரி

பெருங்காஞ்சி என்னும் புறத்துறை நிலையாமைத் தத்துவத்தை மனத்தால் உணர்ந்து கூறுவதாகும். தொல்காப்பியம், "மாற்றாரும் கூற்றம் சாற்றிய பெருமை" (புறத்திணையியல்.சூ.24) என்று வாழ்நாளின் நிலையாமையை எடுத்துக்கூறுகிறது. புறப்பொருள் வெண்பாமாலை நிலையாமை என்னும் நெறியை மலையோங்கிய மாநிலத்து நிலையாமை நெறியுரைத்தன்று (பு.வெ.மா.காஞ்சிப்பொது.3) என்று குறிப்பிடுகிறது.

ஆயா தறிவயர்ந் தல்லாந் தகலிடத்து
மாயா நிதிய மனைச்செறீ, - எயா
திறுகப் பொதியன்மின் ,ன்றொடு நாளைக்
குறுக வருமரோ கூற்று (பு.வெ.மா.270)

புறப்பொருள் வெண்பாமாலையில் இடம்பெறும் இவ்வெண்பா, உயிர் கவரவரும் கூற்றுவன் இன்றோ நாளையோ வரலாம். அதனால் அகன்ற இப்பூவுலகில் பொருளைச் சேமித்து வைத்துக்கொண்டு பயனின்றி இருக்காமல் பிறருக்கும் கொடுத்து உதவுங்கள் என்று குறிப்பிடுகிறது. இதனால் நிலையாமையே இவ்வுலகின் பண்பு என்பது விளங்கும். நீர்க்கோலம்

விரைவில் அழிவதையொத்து மனித வாழ்க்கையும் அழியும் தன்மை உடையது. உலக வாழ்க்கை இன்பமும் துன்பமும் நிறைந்தது. இரண்டையும் சமமாக எடுத்துக்கொள்ளும் பக்குவமும் இன்பம் தேர்ந்து வாழும் வாழ்க்கையும் மனித குலத்திற்கு வேண்டும். பக்குடுக்கை நன்கணியார் ஓரில் நெய்தல் கறங்க என்னும் புறம். 194 ஆம் பாடலில் இதற்கான சூழலைத் தெள்ளிதின் விளக்குகிறார். இவ்வுலகம் எத்தனை துன்பம் வாய்ந்தது ஒரு வீட்டில் சாப்பறை ஒலிக்கிறது. மற்றொரு வீட்டில் மணமுழவு ஒலிக்கிறது. இழந்தவர்கள் துன்புறுகிறார்கள், புது உறவை ஏற்றவர்கள் மகிழ்கிறார்கள். இவ்வாறாக இன்பமும் துன்பமும் கலந்து உலகைப் படைத்த இறைவன் பண்பற்றவன். எனினும் நிலையாமைத் தன்மை இவ்வுலகிற்கும் உலக மக்களுக்கும் இயல்பாதலின் துன்பம் தருவனவற்றை விலக்கி இன்பம் தேர்ந்து வாழ வேண்டும்" என்று குறிப்பிடுகிறார். கணியன் பூங்குன்றனார் கூறுவது போல் "துன்பம் வருவதும் விலகிச் செல்வதும் இயற்கை" (புறம். 192) என்பதை மனத்தில்கொண்டு நிலையாமையை உணர்ந்து மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்று வலியுறுத்துகிறார். பிரமனார் என்னும் புலவர் நிலையாமை உண்மைத்தன்மை உடையது என்பதை விளக்கவரும்போது உலகம் முழுவதையும் பொது என்று கூறாமால் எனதென்றுவென்று அரசாண்ட மூவேந்தர்களின் வாழ்வும் இறுதியில் முடிந்துபோனது. அவர்கள் தேடி வைத்த அளப்பரும் செல்வம் அவர்களின் உயிரைக் காக்கவில்லை. அதனால் அறம் ஒன்றே இவ்வுலகில் நிலைபெற்ற புகழைத் தரும். இயமன் உயிர் கவரும் காலத்தில் உடலை ஒழித்துப் புகழாமல் நிலைபெற அறம் செய்வதொன்றே வழியாகும். (புறம். 357) என்று கூறுவது நிலையில்லா வாழ்வைப் பொருளார்ந்த வாழ்வாக அமைத்துக் கொள்ள வேண்டியதன் தேவையை உணர்த்துகிறது.

புறநானூற்றுப் புலவர் கரவேட்டனார், அந்துவன் கீரனை நோக்கிப் பேசுகிறார். புலவர்கள் புலனை உழும்போது அரசர்கள் அமைதி காப்பது இயற்கை. அவ்வாறான சூழல் ஒன்றில் நீ கொடையால் புகழ்பெற வேண்டும் இறந்த பின்னும் புகழை நிலைநிறுத்த வேண்டும் என்று வற்புறுத்துகிறார். கரவேட்டனார் பாடலில் மன்னனிடம் நேரடியாகவே நிலையாமையை உணர்த்தும் போக்கைக் காணமுடிகிறது. நாட்டைத் தனதாக வெற்றி கொண்ட முடிமன்னரும் முடிவில் முதுகாட்டை அடைந்தனர். உனக்கும் அந்நிலை வருவது உறுதியாகும் (புறம்.359) என்று அறமுரைக்கிறார். உலகில் தாம் செய்த அறங்களால் நிலைபெற்று வாழ்பவர்கள் பலர். யாருக்கும் பயனற்று வாழ்ந்து மடிபவர்களும் பலர். பிறருக்கு உதவாதார் செல்வமும் நிலைத்து நிற்கும் தன்மையிலதாகும். அதனால் அறவாழ்வே வாழ்வு என்று சங்கவருணர் என்னும் புலவர் குறிப்பிடுகிறார்.

அன்னோர் செல்வமும் மன்னி நில்லாது
இன்னும் அற்று அதன்பண்பே (புறம்.360)

இவ்வடிகள் உதவும் பண்பற்றவர்களின் செல்வம் நிலைத்து நிற்காது என்பதை நுட்பமுடன் பதிவு செய்துள்ளன. போர் அறம் மன்னனுக்கு உரிமை உடையது எனினும் எவ்வகையிலும் போர் சிறந்தது என்று வேதங்களில் கூறப்படவில்லை. ஒழுக்க நூல்களிலும் கூறப்படவில்லை. சிறுவெண்டேரையார் அறநெறி பேணுமாற்றான் போர்பற்றிக் கூறும் கருத்து சிந்திக்கத்தக்கதாயுள்ளது. பகைவர் மேல் படை எடுத்துச் செல்லும் தன்

தலைவனைக் கண்டு புகழும் இயல்பினரான அவர் மன்னன் நிலையாமையை உணர்ந்து அறம் செய்யும் பண்பினன் என்பதையும் பதிவு செய்துள்ளார்.

ஞாயிற் றன்ன ஆய்மணி மிடைந்த
மதியுறழ் ஆரம் மார்பில் புரளப்
பலிபெறு முரசம் பாசறைச் சிலைப்பப்
பொழிலகம் பரந்த பெருஞ்செய் ஆடவர்
செருப்புகன்று எடுக்கும் விசய வெண்கொடி
அணங்குருத் தன்ன கணங்கொள் தானை
கூற்றத் தன்ன மாற்றரு முன்பின்
ஆக்குரல் காண்பின் அந்த ணாளர்
நான்மறை குறித்தன்று அருளாகாமையின்
அறம்குறித் தன்று பொருளா குதலின்
மருள்தீர்ந்து மயக்கு ஒரீஇக்
கைபெய்த நீர் கடற்பரப்ப
ஆமிருந்த அடைநல்கிச்
சோறு கொடுத்து மிகப் பெரிதும்
வீறுசால் நன்கலம் வீசி நன்றும்
சிறுவெள் என்பின் நெடுவெண் களரின்
வாய்வன் காக்கை கூகையொடு கூடிப்
பகலும் கூவும் அகலு ளாங்கண்
காடுகண் மறைந்த கல்லென் சுற்றமொடு
இல்லென்று இல்வயின் பெயர மெல்ல
இடஞ்சிறிது ஒதுங்கல் அஞ்சி
உடம்பொடும் சென்மார் உயர்ந்தோர் நாட்டே (புறம்.362)

உலகை வலிமையோடு அரசாண்டு புகழ் பெற்ற மன்னர்கள் பலராவர். அவர்கள் வீரத்தால் சிறந்தவர்கள். உடைமரத்தின் (வேலமரம்) சிறிய இலை அளவுகூடத் தன் நிலத்தைப் பிறர் கொள்ள விடாதவர்கள். அவ்வாறு உலகைத் தம்முடைய ஆளுகையில் கொண்டு வந்து ஆண்டவர்கள் கடற்கரையில் இருக்கும் மணலைவிடவும் எண்ணிக்கையில் பலராவர். அத்தனை பேர்களும் இறுதியாக மாய்ந்துபோயினர். அதனால் இறக்கும் முன் புகழால் நிலைபெறுக என்கிறார் சிறுவெண்டேரையார். தன் தலைவன் மனத்தில் தான் சொல்லும் செய்தி பதிய வேண்டும் என்பதற்காகக் கட்டளையிடும் குரலோடு பேசுகிறார்.

இன்னா வைகல் வாரா முன்னே
செய்ந்நீ முன்னிய வினையே
முந்நிர் வரைப்பகம் முழுதுடன் துறந்தே (புறம்.363: 16-18)

கூகைக் கோழியார் என்னும் புலவர் இறந்த பின் அறம் செய்தல் இயலாதென்பதால் இல்லார்க்கு வழங்குதல் நன்றாம் என்கிறார்.

வாடாமாலை பாடினி அணியப்
பாணன் சென்னிக் கேணி பூவா
எரிமருள் தாமரைப் பெருமலர் தயங்க
மைவிடை ,ரும்போத்துச் செந்தீச் சேர்த்தித்
தாயங் கனிந்த கண்ணகன் கொழுங்குறை
நறவுண் செவ்வாய் நாத்திறம் பெயர்ப்ப
உண்டும் தின்றும் இரப்போர்க்கு ஈய்ந்தும்
மகிழ்கம் வம்மே மறப்போ ரோயே
அரிய வாகலும் உரிய பெரும
நிலம்பக வீழ்ந்த அலங்கல் பல்வேர்
முதுமரப் பொந்தின் கதுமென இயம்பும்
கூகைக் கோழி ஆனாத்
தாழிய பெருங்கா டெய்திய ஞான்றே (புறம். 364)

இப்பாடலில் கூகைக் கோழியார் தம் தலைவனை அறம் செய்ய உரிமையோடு அழைப்பதைக் காணமுடிகிறது. "பாடினிக்குப் பொன்னரி மாலையும் பாணனுக்குப் பொன்தாமரைப்பூவும் அவர்கள் உண்ண ஆட்டுக்கிடாயின் நெருப்பில் வெந்த இறைச்சியும் கள்ளும் தினம்தோறும் இரவலர்களுக்குக் கொடுத்தும் உண்டும் மகிழ வருக என்கிறார். இவ்வாய்ப்பு முதுமரப் பொந்தில் கூகை இருந்து கூவும் இடுகாட்டை அடைந்த பின்பு கிடைக்காது என்கிறார். நிலை இல்லாத வாழ்வில் நிலைத்த புகழ்பெறச் செய்வன செய்க என்று (புறம்.365) கட்டளை இடுகிறார் மார்க்கண்டேயனார். கோதமனார் தருமபுத்திரன் என்னும் தன் தலைவனைப் பாடிய பாடலில் தலைவனின் கடமை, பொறுப்பு ஆகியவற்றை நிலையாமை உணர்ந்து செய்ய வேண்டிய முறையில் செய்க என்று வற்புறுத்தும் போக்கைக் காணமுடிகிறது. உலகம் முழுதும் வலிமையால் அரசாண்ட மன்னர்கள் புகழை நிலைநிறுத்தி இறந்து போயினர். நிலையாமையே உலகின் இயல்பு என்பதால் நான் கூறுவதைக் கேட்க வேண்டும். உன் வலிமையைப் பிறர் அறியாமலும் பிறர் மனத்தை அறிந்தும் வாழவேண்டும். இரவில் முயற்சிகள் சிறக்காதென்பதால் அதற்குரிய காலமான பகலில் செய்வன திறம்படச் செய்தல் வேண்டும். இரவில் தலைவியுடன் இன்புறல் வேண்டும். முயற்சியால் வரும் செல்வத்தை நீயும் உண்டு இரவலர்க்கும் வழங்க வேண்டும். வேண்டியோர்க்கு வேண்டியன அளித்துப் புகழால் நிலைபெற வேண்டும். பலி கொடுப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட ஆட்டுக்கிடாய்கள் வீழ்வது எத்தனை உறுதியோ அவ்வாறே உயிரிழப்பதும் உண்மையாகும். (புறம். 366). பெருங்காஞ்சித் துறையில் இடம்பெற்றிருக்கும் புறப்பாடல்கள் நிலையாமை உலகின் இயல்பு என்பதை வலியுறுத்துகின்றன. புகழால் நிலைபெறுதலே உலகில் நிலைத்து வாழ வழி என்றும் மற்றெல்லாம் பயனற்ற வாழ்வில் நிலையற்றனவே என்று ஆழமான நோக்கில் பதிவு செய்துள்ளன.